# <u>குளித்தலை நகராட்சி</u>

31.08.2020.ஆம் தேதி திங்கட்க்கிழமை காலை 10.15 மணியளவில்
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

| | |
|---|---|
| பொருள்–01. | இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு நடவடிக்கையாக கொசுக்களை ஒழிப்பதற்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பரிந்துரைபடி, T.M.S.Corporation Ltd., நிறுவனத்தின் பரிந்துரைத்த Paramount Pesticides Limited சென்னை நிறுவனத்திடம் Pyrethiram 2% extract புகை மருந்து 200–லிட்டர் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1056/2020/எச்1) |
| பொருள்–02. | இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற அரசு அங்கீகாரம் பெற்ற காந்தி மோட்டார், ஈரோடு பனிமனையில் வாகனத்தை ஒப்படைப்பு செய்து, பழுதினை நீக்கம் செய்தும், தகுதிச்சான்று பெற்று நகராட்சிவசம் ஒப்படைப்பு செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1,10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேற்படி கொரோனா பரவிவரும் சூழ்நிலையில் சுகாதார பணி மிக முக்கிய பணி என்பதால், மேற்படி பனிமனையில் ஒப்படைப்பு செய்ய பணி ஆணை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1108/2020/H1) |
| பொருள்–03. | இந்நகராட்சிக்குட்பட்ட சுற்றளவு 11.16 ச.கி.மீ. கொண்ட 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகிறது. அரசு நிதியின்கீழ் BOV(Battary Operator Vehicle) 11 எண்ணங்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இயந்திரமும் வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட இயந்திரம் தினந்தோறும் மின்னூட்டம் செய்வது மிகவும் அவசியமானது. மேலும் இதனை பாதுகாப்பு இல்லாமல் மழைகாலங்களில் நனைந்து விரைவில் பயன்படுத்த இயலாதநிலை ஏற்பட வாய்ப்புள்ளதால், பாதுகாப்பு கருதி ஒரு அறை அமைக்கவும் தயார் செய்யபபட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு செலவினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க.எண்.1102/2020/இ1) |

பொருள்– 04. நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களை பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக தினமும் பார்ப்பதற்காக வருகை தருவது இயல்பானது. அவ்வகையில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறை மிகவும் சிறியதாகவும், ஒருவர் மட்டுமே அமர்ந்து தங்களுடைய விளக்கங்களை தெரிவிக்க வருகிறார்கள். தற்போதுள்ள அறை போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் புதியதாக (தற்காலிகமான) GIC கூடிய அறை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.20 லட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியினை, வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து 2020–2021ஆம் ஆண்டு திட்ட மதிப்பில் செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1091/2020/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சிப் பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் பொதுமக்களின் நலன்கருதி திரவ குளோரின் கலந்த குடிநீர் விநியோகம் செய்வது மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்பட்டு கடந்த காலங்களில் இருந்து இன்றைய தேதிவரை குளோரின் கலந்து மட்டுமே குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து வழங்க வேண்டியதின் அவசியம் கருதி ஓராண்டுக்கு தேவைப்படும் அளவு சுமார் 40000– லிட்டர் (நாற்பதாயிரம் லிட்டர்) வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.7,60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை 2020–2021 நிதியாண்டு குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1098/2020/இ1)

பொருள்– 06. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் அனைத்து பகுதிகளிலும் தரம் பிரித்து குப்பைகள் எடுத்து செல்வதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து சிறிய அளவில் உள்ள வண்டிகள் வாங்குவதற்கு அனுமதி வழங்கியதின்பேரில், இந்நகராட்சிக்கு 14 வண்டிகள் வாங்கப்பட்டு சுமார் ஒரு வருடத்திற்குமேல் ஆன நிலையில், வண்டிகள் பழுதான நிலையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என துப்புரவு ஆய்வர் குறிப்பின்படி ஏற்று, வண்டிகளை பழுதுநீக்கம் செய்ய உற்பத்தி செய்யும் நிறுவனம் பிரியம் இன்டஸ்ரீஸ் மற்றும் இஞ்சினியரிங் பிரைவேட் லிமிடெட், தாராபுரம் மூலமே பழுது நீக்க பணிகள் செய்வதற்கும், ஏற்கனவே பொருத்தப்பட்ட பேட்டரிகள் எடுத்துக் கொண்டு அதற்குரிய விலையை புதிதாக வாங்கும் பேட்டரியின் விலையில் குறைத்து வழங்கவும் கோரப்பட்டது. அதன்படி, மேற்படி வண்டிகளை சரிசெய்வதற்கு குறிப்பிட்டுள்ள தொகை ரூ.5.35 இலட்சத்திற்கு செலவு செய்யவும், பணியினை செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் பொது நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1103/2020/இ1)

..3..

பொருள்– 07. குளித்தலை நகராட்சியால் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதனை செய்ய இரண்டு (2) மாதிரிகள் ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பப்படுகிறது. அதனை தொடர்ந்து, குடிநீரின் தரத்தினை ஒவ்வொரு மாதமும் பரிசோதனை செய்யவேண்டி உள்ளதால், அவசியம் கருதி ஓராண்டுக்கு தேவைப்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை 2020–2021 நிதியாண்டு குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.546/2020/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி 1994ஆம் ஆண்டுமுதல் 11.16 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இரண்டாம்நிலை நகராட்சியாக செயல்படுகிறது. ஆணையருக்கு நகராட்சி குடியிருப்பு உள்ளது. பொறியாளருக்கு குடியிருப்பு இல்லை. பொறியியல் பணி மிக முக்கிய பணியான குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு போன்ற பணிகளை கவனிக்க வேண்டியுள்ளது. நகரில் உள்ள விடுதியில் தங்கி பணிபார்க்க பல்வேறு இடையூறு ஏற்படுவதால் தற்போது ஆணையர் குடியிருப்பு கீழ்புறமுள்ள காலிமனையில் பொறியாளர் குடியிருப்பு கட்டுவதற்கு உத்தேச செலவினம் ரூ.9.80க்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து என்பதாயிரம்) பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி செலவினத்தை 2020–2021 நிதியாண்டில் பொதுநிதியில் பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1106/2020/இ1)

பொருள்– 09. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதை செய்யுமிடம் புதர்கள் மற்றும் சிதிலம் அடைந்துள்ளதால், அதனை பயன்படுத்த ஒப்பந்ததாரர் வருகை புரியாமல் சாலைகளில் வெட்டுவதை சரிசெய்ய மேற்கண்ட கட்டிடத்தை உடனடியாக சரிசெய்து கொடுக்கவும், திடக்கழிவு மீட்பு மையம் முன்புறம் பயன்படுத்த இயலாதவாறு இருபபதால், பொதுமக்கள் தகாத காரியங்களில் ஈடுபடுவதாலும், மேற்கண்ட இடத்தினை கம்பிவேலி அமைத்து ஒரு கேட் அமைக்கும் பணி செய்வது மிகவும் அவசியமாக உள்ளதால், இரண்டு பணிகளும் ஒரே நேரத்தில் செய்துமுடிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, பணிகள் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஈடுசெய்யவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1149/2020/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சிப் பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது இரண்டு இடங்களில் நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் இவை இரண்டிலும் தலா ஒரு எண்ணம் குளோரின் மோட்டார் மட்டுமே உள்ளது. எனவே, மோட்டார் பழுதடைந்துவிட்டால் குளோரின் சேர்க்க இயலாதநிலை ஏற்படுகிறது. எனவே, இரண்டு மோட்டார்கள் வாங்கி பொருத்துவது மிகவும் அவசியமாகிறது. இதன் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை 2020–2021 நிதியாண்டு குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1098/2020/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான புல எண்.712/1(பகுதி), 713/2, 713/3இல் உள்ள 4.76 ஏக்கர் நிலங்களை புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்ட பிரிவு 34இன்கீழ், குளித்தலை நகராட்சிக்கு விற்பனை செய்திட திருக்கோயில் செயல் அலுவலருக்கு அனுமதி வழங்க, இந்து சமய அறநிலையத் துறை ஆணையருக்கு அனுமதி வழங்கியதின்பேரில், அரசாணை(நிலை) எண்.90, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அ.தி.4–2) துறை, நாள்–19.05.2020இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அரசாணையை, முதன்மை செயலாளர் / ஆணையாளர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை அவர்களின் கடிதம் வி.எண்.1/2020/ஆர்–3, நாள்–01.06.2020இன்படி விளம்பரம் செய்து, கட்டணத் தொகையாக ரூ.27,720/–ஐ, கேட்புத் துறையிடம் (நகராட்சி வசம்) பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, செயல் அலுவலர், அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில், குளித்தலை அவர்கள் தனது 10.06.2020 தேதியிட்ட கடிதத்தில் (கடித எண் குறிப்பிடவில்லை) விளம்பரக்கட்டணம் ரூ.27,720/–ஐ, வழங்க கோரியுள்ளார். எனவே, மேற்படி தொகையை செயல் அலுவலர், அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில், குளித்தலை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1954/2013/பி2)

பொருள்– 12. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு பணிக்கு டெங்கு கொசு புழுக்களை ஒழிப்பதற்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் கொசுப்புழுக்களை ஒழிப்பதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி 24 டெங்கு தடுப்பு பணியாளர்களை (DBC) ஸ்ரீசாய் மகளிர் சுயஉதவிக்குழுமூலம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு வீடுகளில் டெங்கு தடுப்பு பணி மேற்கொள்ள 01.08.2019 முதல் 31.07.2020 வரை உள்ள காலம் நிறைவடைவதால், மேற்கொண்டு 01.08.2020 முதல் 31.07.2021 வரை நீடித்துக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.29,00,000/–க்கு (ரூபாய் இருபத்தி ஒன்பது லட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2). மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1326/2017/எச்1)

*******

# குளித்தலை நகராட்சி

31.08.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 47 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 2 | 2 | 48 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 3 | 3 | 49 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 50 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 5 | 5 | 51 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 6 | 6 | 52 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 7 | 7 | 53 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 54 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 55 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 56 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 57 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 58 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.